செ.வெ.எண்: 408/2016 நாள்: 29.06.2016

செய்தி குறிப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த இளைஞர்கள் அறிவது, 02 ஆகஸ்ட் 2016 முதல் 10 ஆகஸ்ட் 2016 வரை ராமனாதபுரம் மாவட்டத்திலுள்ள சீதாகாதி சேதுபதி விளையாட்டு மைதானத்தில் வைத்து இராணுவ ஆட்சேர்ப்பு முகாம் நடைபெறவுள்ளது. இத்தேர்வில் கலந்து கொள்ள உயரம் 162 செ.மீ முதல் 166 செ.மீ –க்கு மேலும் எடை 50 கிலோவுக்கு குறையாமலும் மார்பளவு 77 செ.மீ மற்றும் 5 செ.மீ கூடுதலாக விரிவடைந்த நிலையிலும் இருத்தல் வேண்டும். கீழ்க்காணும் பிரிவுகளுக்கு குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியிலும் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

**1)Soldier Technical**

வயது : 17 ½ முதல் 23 வரை

கல்வி தகுதி : 10+2 -வில் இயற்பியல் வேதியியல் கணிதம் மற்றும் ஆங்கிலம் பாடத்துடன் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**2)Soldier Technical (Avn & Amn)**

வயது : 17 ½ முதல் 23 வரை

கல்வி தகுதி : 10+2 -வில் இயற்பியல் வேதியியல் கணிதம் மற்றும் ஆங்கிலம் பாடத்துடன் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது Diploma in Mechanical , Electrical, Automobile, Computer Science & Electronics and Instrumentation.

**3)Soldier General Duty**

வயது : 17 ½ முதல் 21 வரை

கல்வி தகுதி : 10 -வில் 45% மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**4)Soldier's Tradesman**

வயது : 17 ½ முதல் 23 வரை

கல்வி தகுதி : 8 –ஆம் வகுப்பில் மற்றும் 10 –ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும

**5)Soldier Clerk & Store Keeper Technical**

வயது : 17 ½ முதல் 23 வரை

**கல்வி தகுதி.** : +2 -வில் ஆங்கிலம் மற்றும் கணிதம், கணக்கியல், Book Keeping பாடத்துடன் 50% மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த இளைஞர்கள் இத்திரளணியில் பங்கேற்க www.joinindianarmy.nic.in என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை தெரிந்து கொண்டு பின்னர் தேவையான பிரிவிற்கு பதிவு செய்யவேண்டும். இதுதொடர்பான அழைப்புக் கடிதம் இதே இணையதளத்தில் 17.07.2016 க்கு மேல் பதிவிறக்கம் செய்து பிரதி எடுத்து அதில் குறிப்பிட்டுள்ள நாளில் அதிகாலை 1.00 மணிக்கு மேற்படி விளையாட்டு மைதானத்தில் வந்து சேரவும். மேலும் விபரங்களுக்கு திருச்சிராப்பள்ளி இராணுவ ஆள் சேர்ப்பு அலுவலக தொலைபேசி எண்.0431-2412254 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.

துணை இயக்குநர்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.